இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 289 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 17 – ஞாயிற்றுக்கிழமை 31 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 289 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 17 - Sunday 31 May 2026 - Dak 8 Pages ₹ 5.00


### இதுவரை 4.60 லட்சம் கருத்துகளைப் பெற்றுள்ளோம்!

# udanpirapinkural.in இன்று நிறைவடைகிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மே 31-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் கழக உடன்பிறப்புகள் அனைவரும் மே 31-க்குள் (இன்றுக்குள்) தங்கள் கருத்துகளை udanpirapinkural.in இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

அன்பு உடன்பிறப்புகளே,

udanpirapinkural.in இணையத்ளத்தில் இதுவரை 4.60 லட்சம்



கருத்துகளைப் பெற்றுள்ளோம்.

இந்த இணையதளத்தின் முக்கிய நோக்கமே உடன்பிறப்புகள் அனைவரும் எவ்விதத் தயக்கமுமின்றி உங்கள் மனதில் தோன்றும் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான். உங்கள் கருத்துகள் நேரடியாக எனக்கே வந்து சேரும்.

இந்த இணையதளத்தில் உடன்பிறப்புகள் மட்டுமல்லாமல், கழக நிர்வாகிகள், கழக அனுதாபிகள், பொது மக்கள் என அனைவரும் அளிக்கும் ஆலோசனைகளை ஆராய்ந்து நம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நான் திட்டமிடுவேன். எனவே மே மாதம் 31ஆம் தேதிக்குள் உங்கள் கருத்துகளை udanpirapinkural.in இணையதளத்தில் பதிவு செய்யவும்.

கழக மாநிலப் பொறுப்பாளர்களும், கழக மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்ற முக்கியப் பொறுப்பாளர்கள் அனைவரும் மறக்காமல், இந்தச் செய்தி அனைத்து உடன்பிறப்புகளுக்கும் சென்றடையும் வண்ணம் உங்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களிலும் Whatsapp குழுக்களிலும் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நியாய விலைக்கடைகளில்

# துவரம் பருப்பு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## வெளிச்சந்தையில் விலை உயருகிறது!

சென்னை, மே 31 –

தமிழ்நாடு அரசு துவரம் பருப்புக்கான டெண்டர் வழங்குவதில் தாமதம் செய்து வருவதால் நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு விநியோகம் தடைபடும் சூழல் உருவாகி உள்ளது.

தமிழ்நாட்டில் நியாய விலை கடைகள் மூலம் துவரம் பருப்பு பொதுமக்களுக்கு குறைவான விலையில் வழங்கப்பட்டு வந்தது. வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ துவரம் பருப்பு 130 முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், நியாய விலை கடைகளில் ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கு வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது, தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் ஜூன் 2வது வாரம் வரைக்கான துவரம் பருப்பு மட்டுமே இருப்பில் உள்ளது. வழக்கமாக இரண்டு மாதத்துக்கான துவரம் பருப்பு அந்தந்த ரேஷன் கடைகளில் ஸ்டாக் வைக்கப்படும். ஆனால், இதுவரை பருப்பு வழங்கப்படவில்லை. தேர்தல் நடைமுறை காரணமாக, துவரம் பருப்புக்காக புதிதாக டெண்டர் கோரப்படவில்லை.

2 வாரங்களுக்கு முன் புதிய ஆட்சி பொறுப்பேற்று, புதிதாக நியமிக்கப் பட்ட கூட்டுறவு மற்றும் உணவு துறைக்கு அமைச்சர்கள், செயலாளர்களுக்கு, துவரம் பருப்பு கொள்முதல் குறித்த தகவல் கொண்டு செல்லப்பட்டது. தொடர்ந்து, உணவு வழங்கல் துறை மூலம் கடந்த 22ம் தேதி துவரம் பருப்புக்கான டெண்டர் கோரப்பட்டு இருந்தது. மே மாதம் 29ம் தேதியுடன் டெண்டர் முடிக்கப்பட்டு, திறக்கப்பட வேண்டும்.

ஆனால், தமிழ்நாடு அரசு காரணம் எதுவும் கூறாமல், துவரம் பருப்புக்கான டெண்டரை திடீரென ரத்து செய்து விட்டது. இதனால், தமிழ்நாடு முழுவதும் ஜூன் 2வது வாரத்துக்கு பிறகு நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், வெளிச்சந்தையில் துவரம் பருப்பு விலை கடுமையாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### த.வெ.க.வின் ரீல்ஸ் ஆட்சியில்

# தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டு!

## மக்களுக்கு தூக்கம் என்பது பகல் கனவாக மாறிவிட்டது!

**சென்னை, மே 31 -**

**அறிவிக்கப்படாத மின்வெட்டால் தூக்கத்தை இழந்து சென்னைவாசிகள் தவித்து வருகின்றனர். வியர்வை, புழுக்கம், கொசுக்கடி என மும்முனை தாக்குதலால் அவதியடைந்து வருகின்றனர்.**

மனிதனின் ஆரோக்கியத்துக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 7 முதல் 9 மணி நேரம் வரை தூங்கவேண்டும் என்று டாக்டர்கள் பரிந்துரை செய்கின்றனர். ஆனால் இத்தனை மணி நேரங்கள் ஆழ்ந்து தூங்குவது என்பது சென்னையில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பெரும்பாலானோருக்கு தற்போது பகல் கனவாகவே இருந்து வருகிறது. இதற்கு காரணம் அறிவிக்கப்படாத மின்வெட்டுதான். மின்வெட்டை பற்றிய பேச்சுதான் இப்போது சென்னையில் பரவலாக கேட்கிறது.

எங்கள் பகுதியில் நேற்று குறைவான நேரம் மட்டும் தான் மின்வெட்டு இருந்தது. மின்சாரம் போனதும் உடனேயே வந்




துவிட்டது என்று சிலர் பெருமையுடன் பேசிக் கொள்கின்றனர். சிலரோ, மின்சாரம் இல்லாததால் எங்கள் குடும்பத்தின் தூக்கமே போச்சு. விடிய, விடிய ஆந்தைப்போல விழித்துக் கொண்டே இருந்தோம் என்கின்றனர். மின்வெட்டு ஏற்பட்டு இருள் சூழ்ந்ததும் ஓடி களைத்த மின்விசிறிகள் ஓய்வெடுக்க தொடங்கிவிடுகின்றன. இதனால் பொதுமக்கள் வியர்வை மழையில் நனைந்து, தூக்கத்தை இழந்து தவிக்கின் றனர்.

**மின் வெட்டு**

சென்னைவாசிகள் கடந்த சில நாட்களாகவே வியர்வை, புழுக்கம் மற்றும் கொசுக்கடி என மும்முனை தாக்குதலை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் பலருடைய தூக்கம் காணாமல் போய்விட்டது. மின்வெட்டு தொடர்ந்து வருவதால் மின்சார வாரிய உதவி எண்கள் எப்போதும் 'பிஸி'யாகவே உள்ளன. அதில் புகார் தெரிவித்தாலும் உடனடியாக தீர்த்து வைக்கப்படுவது இல்லை.

மின்சார வாரிய ஊழியர்கள் பழுதுபார்ப்பு பணியில் இருக்கிறார்கள். விரைவாக நிறைவேற்றி தருவார்கள் என்று மட்டும் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது போன்று சரியான சமயத்தில் மின்சார வாரிய ஊழியர்கள் வந்து சரி செய்து தருவதில்லை. செல்போனில் தொடர்பு கொண்டாலும் எடுப்பது இல்லை என்பது பொது மக்களின் பொதுவான குற்றச்சாட்டாக இருக்கிறது. மின்வெட்டு அடிக்கடி ஏற்படுவதன் காரணமாக பிரிட்ஜ், ஏ.சி, டி.வி, வாஷிங்மெஷின் உள்ளிட்ட பல்வேறு வீட்டு உபயோக பொருட்களும் சேதமடைகின்றன.

**கலையும் தூக்கம்**

சென்னை செங்குன்றத்தை அடுத்த விளாங்காடுபாக்கம் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு 11 மணி முதல் மறுநாள் மதியம் 12 மணி வரை தொடர் மின்வெட்டு இருந்தது. பலரும் தூக்கத்தை தியாகம் செய்ததோடு, அன்றாட பணிகளையும் செய்யமுடியாமல் தவித்தனர். நேற்று முன்தினம் நள்ளிரவும் 10 முறைக்கு மேல் மின்வெட்டு இருந்தது.

இதுபோல சென்னையில் பல்வேறு இடங்களிலும் மின்வெட்டு மக்களை பாடாய் படுத்துகிறது. இரவு நேரம் வந்தாலே மக்கள் மின்வெட்டை நினைத்து பதற்றம் அடையத் தொடங்கிவிடுகிறார்கள். தூக்கம் கலைவதால் பலரும் மன அழுத்தத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் மின்வாரியத்தை பலரும் திட்டி தங்களுடைய ஆதங்கத்தை தீர்த்துக் கொள்கிறார்கள். அறிவிக்கப்படாத மின்வெட்டு மக்கள் மத்தியில் தமிழக அரசுக்கு கெட்டப்பெயரை சம்பாதித்து கொடுத்துள்ளது.

**மொட்டை மாடி**

மின்வெட்டு காரணமாக ஏ.சி. அறைகளிலும் நிம்மதியான தூக்கத்துக்கு உத்தரவாதம் இல்லை என்பதால் பலரும் மொட்டை மாடியில் குடும்பத்தோடு தஞ்சம் அடைந்துவருகின்றனர். பாய், தலையணை, போர்வை, மின்சார விளக்குடன் வீடு, அடுக்குமாடி குடியிருப்புகளின் மொட்டை மாடியில் தூங்கும் கலாசாரம் தொடங்கியிருக்கிறது.

### நாள்தோறும் கொலை, கொள்ளை!

# தூங்கிக் கொண்டிருக்கிறார் டம்மி CM!

## கழக தொழில்நுட்ப அணி விமர்சனம்!

*சென்னை, மே 31 -*

*தமிழ்நாட்டில் கொலை கொள்ளை சம்பவங்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள நிலையில், சனிக்கிழமை விடுமுறை என்று டம்மி CM விஜய் தூங்கி கொண்டிருப்பதாக தி.மு.க. IT wing விமர்சித்துள்ளது*

*தி.மு.க IT wing வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போய் தினம் தினம் கொலை, கொள்ளை சம்பவங்கள் அரங்கேறி வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*பல குற்றச் செயல்களில் த.வெ.க.வினரே ஈடுபடுகின்றனர் என்றும் இதையெல்லாம் கண்டும் காணாமல், சனிக்கிழமை விடுமுறை என்று தூங்கிக் கொண்டிருக்கிறார் டம்மி CM விஜய் என்றும் தி.மு.க. IT wing விமர்சித்துள்ளது.*

### விமானப்படை விமானங்களில்

# 'நீட்' வினாத்தாள் விநியோகம்!

புதுடெல்லி, மே 31 –

மருத்துவ இளநிலை படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வுக்கான வினாத்தாள் முன்கூட்டியே கசிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மகாராஷ்டிராவின் புனே நகரைச் சேர்ந்த சில பேராசிரியர்கள், நீட் வினாத்தாள் தயாரிப்பில் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் மூலமாக நாடு முழுவதும் வினாத்தாள் கசிந்திருப்பது சிபிஐ விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சூழலில் நீட் மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதாவது: இதற்கு முன்பாக இந்திய அஞ்சல் துறை உதவியுடன் நீட் வினாத்தாள்கள் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது நீட் மறுதேர்வுக்கான வினாத்தாள்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல விமானப் படையின் உதவியை கோரி உள்ளோம். இதற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் வழங்கி உள்ளார்.

பாதுகாப்புத் துறை, உள்துறை அமைச்சகம் மற்றும் அனைத்து மாநில அரசுகளின் உதவியுடன் நீட் மறுதேர்வு நேர்மையாக நடத்தப்படும். சிறு தவறு கூட ஏற்படாத வகையில் பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகள் கண்டிப்புடன் பின்பற்றப்படுகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

### நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய

# குடியிருப்புகளை வழங்குவதில் முறைகேடு!

## வீடுகளை உடனே வழங்கக்கோரி பயனாளிகள் சாலை மறியல்!

சென்னை, மே 31 –

சென்னை கோட்டூர்புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை வழங்கக் கோரி பயனாளிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 841 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பல்வேறு குடியிருப்புகளை முன்னாள் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திறந்து வைத்தார். சென்னையில் கோட்டூர்புரம், மயிலாப்பூர், தேனாம்பேட்டை, தியாகராய நகர் உள்ளிட்ட இடங்களில் இந்த குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் தற்போது த.வெ.க. ஆட்சி ஏற்பட்டுள்ள நிலையில், பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை வழங்குவதில் அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுவதாக புகார் எழுந்துள்ளது.

இந்நிலையில், கோட்டூர்புரம் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகளின் பயனாளிகள், தங்களுக்கான வீடுகளை உடனே வழங்கக் கோரி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

